# வேலணை மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் அதிபருமான காலஞ் சென்ற திரு சின்னையா இராஜநாயகம் அவர்களின் நினைவு

அதிபர் உயர்திரு சின்னையா இராஜ நாயகம் அவர்கள் தீவகத்தின் நெடுந் தீவில் பிறந்து புங்குடுதீவில் திருமணஞ் செய்து யாழ்நகரில் வசித்துப் பின்னர் கனடாவில் குடியேறித் தனது இறுதிக் காலத்தைக் கனடாவிலும் யாழ்ப்பாணத் திலும் மாறி மாறிக் கழித்துக் கடந்த ஆகஸ்ட் மாதம் கனடாவில் தனது 93வது வயதில் அன்புத் துணைவியார் திருமதி கமலாம்பாள் இராஜநாயகம் அவர்கள் கண்கலங்க அமைதியாக உயிர் நீத்தார்.

விஞ்ஞானமாணிப் பட்டதாரியான இவர் எமது கல்லூரியின் பொற்கால அதிபர் காலஞ்சென்ற உயர்திரு தம்பு அவர் களின் காலத்தில் உயிரியல் விஞ்ஞான ஆசிரியராகப் பணி புரிந்தார். இவரது கம்பீரமான தோற்றமும் துணிச்சலான செயற்பாடுகளும் பாடசாலைச் சமூகத்தி னரிடையே நன்மதிப்பை உருவாக்கிய துடன் அதிபர் தம்பு அவர்களின் நம்பிக் கைக்குரியவர்களில் ஒருவரானார். இதன் காரணமாகப் பாடசாலையின் உயிரியல் ஆய்வுகூடத்தை ஆரம்பிக்கும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இப்பெரும் பொறுப்பைத் தனது முழு வலுவுடன் செயற்படுத்தினார். குறிப்பாக வன்னிப் பிரதேசத்திலிருந்து மண்டை தீவினூடாக மரக்குற்றிகளை யாழ்ப் பாணத்திற்குக் கொண்டு வந்து அவற் றைப் பலகைகளாக்கிப் பின்னர் தள பாடங்களாக்கிப் பாடசாலைக்குக் கொண்டு வந்தது மட்டுமல்ல அவற்றை மேல்மாடிப் படிகளினூடாக பல சிரமங் களின் மத்தியில் கொண்டு சேர்த்து அமைக்கப்பட்டது தான் மேல்மாடியில் மேற்கு எல்லையில் அமைந்திருந்த உயிரியல் ஆய்வுகூடம் என்பது பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லாத விடய



மாகும். அந்த ஆய்வுகூடத்தின் அழ கிற்குப் பின்னால் அன்னாரின் கடும் உழைப்பு இருந்தமை கல்லூரியின் பழைய மாணவர்கள் மத்தியில் நன்றி யுடன் நினைவு கூரப்பட வேண்டிய ஒன்றாகும். பின்னர் கல்வியதிகாரிகளின் வேண்டுகோளையேற்று முள்ளியவளை வித்தியானந்தா மகாவித்தியாலயத்திற்கு அதிபராகப் பதவியுயர்வு பெற்றுச் சவால் கள் மிகுந்த அப்பதவியில் திறமையுட னும் துணிவுடனும் செயற்பட்டுப் பெருமை பெற்றார்.

1971ல்எமது கல்லூரியின் அதிபர் நாற் காலியை அலங்கரிக்கும் வாய்ப்பைப் பெற்று 1973 வரை அதிபராகக் கடமை யாற்றினார். இக்காலகட்டத்தில் கல்லூரி க்கான புதிய விளையாட்டு மைதான த்தை இருபதினாயிரம் ரூபாக்களுக்கு வாங்கினார். மாணவர்களுக்கான சாரணர் பயிற்சிக்களை மண்கும்பான் (சாட்டி) போன்ற வெளியிடங்களில் நடாத்தினார். எல்லாவற்றுக்கும் மேலாக ஆசியாவின் மிகச்சிறந்த தமிழறிஞர்களில் ஒருவரான தனிநாயகம் அடிகளாரை எமது கல்லூரி க்கு வரவழைத்து உரையாற்ற வைத் துப் பாடசாலை மண்ணைப் புனித மண்ணாக்கிப் பெரும் பணியாற்றிய பின் கல்வியதிகாரியாகப் பதவியுயர்வுடன் மாற்றலாகிச் சென்றார்.




தனது ஓய்வுக் காலத்திலும் எமது கல்லூரி விழாக்களில் தொடர்ந்து பங்கு பற்றிச் சிறப்பித்தார். குறிப்பாக 1999 இல் அதிபர் திரு கு.கணேசலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொன்விழா விலும் பின்னர் தற்போதய அதிபர் திரு சி.கிருபாகரன் அவர்களது தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாக்களிலும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கனடாவில் வாழ்ந்த போது 2014ம் ஆண்டு எமது சங்கத்தினால் நடாத்தப் பட்ட வருடாந்த ஒன்றுகூடலில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தமை மறக்கமுடியாத நிகழ்வாகும்.

தன் கருத்தை யாருக்காகவும் விட்டுக் கொடுக்காத மேதையவர். உறுதியென் பது அவர் உடன் பிறந்தது. பலருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த எங்கள் அதிப ரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழ ப்பாகும். அவரது ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திப்போம்.

**சி. இளஞ்செழியன் (தலைவர்)**

வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-கனடா

பிற்குறிப்பு: சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் வழமை போல் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது.